DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 73/2024 & Spl.SC.90/2024

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | கிருஷ்ணன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of November 2025.

1 முதல் 4 எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

__முதல் விசாரணை :__

எனக்கு சிவகங்கை தாலுகா முத்தரசன் கிராமம் சொந்த ஊர் ஆகும். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இன்றிலிருந்து சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் ஊருக்கு அருகில் மானாமதுரை சிப்காட் காவல்நிலையம் அருகே வந்த போது என்னிடம் எழுதப்பட்ட ஒரு காகிதத்தில் போலீசார் கையொப்பம் கேட்டதால் இங்கு காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் போட்டேன். மேற்படி கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.4.-ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் கடந்த 30.03.2019-ல் நானும், எங்கள் ஊரைச்சார்ந்த கிருஷ்ணன் என்பவரும் மானாமதுரை செல்வதற்காக காலை 10.00 மணியளவில் வேலூர் அய்யனார் கோவில் அருகே சென்றுகொண்டிருந்த போது அங்கு நின்றிருந்த சிப்காட் காவல்துறையினர் வழக்கு சம்பவம் குறித்த இடத்தில் தயாரித்த பார்வை மகஜரில் நானும், கிருஷ்ணனும் சாட்சிகளாக கையொப்பம் போட்டோம் என்றும், அது குறித்து போலீசார் என்னை

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.14 14:40:47 +0530

விசாரித்தார்கள் என்றும், தற்போது எதிரி எங்கள் பக்கத்து ஊர்க்காரர் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.14 14:40:53 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை